Vlambaram -July 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-07-14 7:21 PM Page 1

கனடாவின் மூத்த தமிழ் இதழ்    விளம்பரம்™ • VLAMBARAM™    Canada's Oldest Tamil Newspaper




35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca    T el: 416-282-8059    www.vlambaram.com




நிதி: 35    பாலம்: 14    சமூக முன்னேற்றப்பத்திரிகை    மாதமிருமுறை    இலவசம்    JULY 15, 2025

# வர்த்தக ஒப்பந்தங்களை பன்முகப் படுத்துவதால் வலுவடைகிறோம்

“ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பிற நட்பு நாடுகளுடன் கனடா புதிய வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்துகிறது. நாங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் இருக்கிறோம். அமெரிக்கா பலவீனமடைந்து வரும்வேளையில் நாங்கள் வர்த்தக ஒப்பந்தங்களைப் பன் முகப்படுத்துவதால் வலுவடைந்து வருகி றோம். அதேவேளையில் அமெரிக்கா பலவீனமாகி வருவதால் அதன் அச்சுறுத் தல் அதிகரித்து வருகிறது” என கனடிய மத்திய அரசின் தொழில்துறை அமைச்சர் மெலனி ஜோலி (Melanie Joly) 2025 ஜூலை 11ஆம் திகதி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், “கனடிய மத்திய அரசாங்கம் அமெரிக்காவுடன் பொது மேடையில் பேச்சுவார்த்தை நடத்தாது. என்றாலும் ஊடகங்கள் ஒன்றை அறிந்துக் கொள்ள வேண்டும். சீனாவைத் தவிர அமெரிக்க அரசு விதித்துள்ள சுங்கவரிகளுக்கு எதிராக பதில் சுங்கவரிகளை அதிக அளவில் விதித்துள்ள உலகில் உள்ள ஒரே ஒருநாடு கனடா வாகும்” என்றார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், கனடியப் பிரதமர் மார்க் காணிக்கு எழுதி சமூக ஊடகங்களில் ஜூலை 10ஆம் திகதி வெளியிட்ட கடிதத்தில் ஓகஸ்ற் முதலாம் திகதியில் இருந்து கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 35% மேலதிக சுங்கவரி விதிக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார். இச்சுங்கவரி கனடா-அமெரிக்கா-மெக்சிகோ வர்த்தக ஒப்பந்தத்திற்குள் (CUSMA) வரும் பொருட்களுக்கு விதிக்கப்பட மாட் டாது. ஆனால் இந்த மேலதிக சுங்கவரி தற்போது 25% சுங்கவரி விதிக்கப் பட்டுள்ள கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கும் சேர்த்தே விதிக்கப்படுகிறது. இந்தக் கடிதத்தின் இறுதியில் அமெரிக்க அதிபர், “உங்கள் நாட்டுடனான எங்கள் உறவைப் பொறுத்து இந்தக் கட்டணங்கள் மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கி மாற்றியமைக்கப்பட லாம்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில், அமெரிக்கா முதலில் சுங்கவரிகளை விதித்த பின்னர் கனடா அதற்கு எதிராக பதில் சுங்கவரிகளை விதித்துள்ளதைச் சுட்டிக்காட்டிய அமெரிக்க அதிபர், இந்த மேலதிக 35% சுங்கவரிவிதிப்பிற்குக் கனடா பதில் சுங்க வரிகளை விதித்தால் அமெரிக்கா மீண்டும் அதே வீதத்தில் தமது சுங்கவரியை உயர்த்தும் எனக் குறிப்பிட்டிருந்தார்.


Donald Trump and Mark Carney in Kananaskis, Alberta, Canada.
Thanks: Amber Bracken/Reuters

அமெரிக்காவிற்குள் ஃபென்ரனல் (Fentanyl) போதைப் பொருள் அமெரிக் காவின் வடக்கு எல்லையின் ஊடாக கனடாவில் இருந்து வருவதை தடுக்க கனடா முற்பட்டால் சுங்கவரி விதிப்பைப் பரிசீலிக்கலாம் எனக் குறிப்பிட்டிருந்த அமெரிக்க அதிபர் ஃபென்ரனல் போதைப் பொருள் கடத்தல் மட்டும்தான் கனடா விற்கும் எமக்கும் இடையேயான பிரச்சினை அல்ல. இன்றும் பல சுங்கவரி தொடர்பா னதும், சுங்கவரி தொடர்பற்றதுமான கொள்கை முரண்பாடுகள் உள்ளன எனவும் குறிப்பிட்டிருந்தார்.

பால் வியாபாரத்தில் கனடிய அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் மானிய த்தைச் சுட்டிக்காட்டி அமெரிக்க பால் வியாபாரிகளுக்குக் கனடிய அரசு 400% வரி விதிப்பதாகவும் குறிப்பிட்டிருந்த அமெரிக்க அதிபர் கனடாவுடனான வர்த்தகப் பற்றாக்குறை அமெரிக்கப் பொருளாதாரம் மற்றும் அமெரிக்க தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளது எனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். 2025 மார்ச் மாதத்தில் அமெரிக்காவின் வடக்கு எல்லையில் ஃபென்ரனல் போதைப் பொருள் கடத்தலை குறிப்பிட்டு சர்வதேச பொருளாதார அவசரகால அதிகார சட்டத்தைப் பயன்படுத்தியே (International Economic Emergency Powers Act) கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25% சுங்க வரியையும் எரிசக்தி மற்றும் பொட்டாஷ் (Potash) இறக்குமதிக்கு 10% சுங்கவரி யையும் அமெரிக்க அதிபர் விதித்திருந் தது குறிப்பிடத்தக்கது. பின்னர் அவர் கனடா-அமெரிக்கா-மெக்சிகோ வர்த்தக ஒப்பந்தத்திற்குள் வரும் பொருட்களுக் கான இறக்குமதிக்கு சுங்கவரி விதிப்பை நீக்கியிருந்தார்.

நியூயோர்க்கைத் தளமாக கொண்டு இயங்கும் Manhattan Institute என்னும் நிறுவனம் தற்போது வெளியிட்டுள்ள புதிய அறிக்கை அமெரிக்க அதிபரின் போதைப் பொருட்கள் கடத்தலைச் சுட்டிக்காட்டி கனடாமீது விதித்துள்ள சுங்கவரி விதிப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. பெரும்பாலா ன ஃபென்ரனல் போதைப் பொருட் கள் அமெரிக்காவின் தெற்கு எல்லையின் ஊடாக கடத்தப்படும்போதே பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனத் தரவுகள் காட்டுவதாக இவ்வறிக்கை கூறுகிறது.

இந்நிறுவனம் 2013ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டுவரை அமெரிக்காவின் 50 மாநிலங்கள் மற்றும் வாஷிங்டன் டி.சி. பிரதேசத்திலும் செய்யப்பட்ட ஃபென்ரனல் மற்றும் ஹெரோயின் (Heroin) பறி முதல்கள் பற்றிய தரவுகளை ஆய்வு செய்து இவ்வறிக்கையை இம்மாத ஆரம் பத்தில் வெளியிட்டுள்ளது. அதில் 99% மாத்திரைப் (Pills) போதைப் பொருட் களும், 97% தூள் (Powder) போதைப் பொருட்களும் அமெரிக்க-மெக்சிகோ எல்லையில் கைப்பற்றப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கை தொடர்பாக ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவித்த இவ் ஆய்வை செய்தோரில் ஒருவரான ஜோனதன் கால்கின்ஸ் (Jonathan kg Caulkins) கூறும்போது, “அமெரிக்காவில் நுகரப்படும் ஃபென்ரனல் பெரும்பாலா னவை மெக்சிகோவின் தென்மேற்கு எல்லை வழியாக அமெரிக்காவிற்குள் வந்தன என்பதற்கான அறிகுறிகள்தான் தமக்குக் கிடைத்துள்ளன. கனடாவில் இருந்து அமெரிக்காவிற்குள் வருவது மிகவும் குறைவு” என்றார்.

கார்னகி மெல்லன் (Carnegie Mellon) பல்கலைக்கழகத்தின் ஹெய்ன்ஸ் (Heinz) வளாகத்தின் பேராசிரியரான ஜோனதன் கால்கின்ஸ் மேலும் தெரிவிக் கையில், “ஃபென்ரனல் கடத்தலை எதிர்த்து அமெரிக்கா செயல்படுவதற்கு முன்னர் அக்கடத்தல் எவ்வாறு, எங்கு நடைபெறு கிறது என்பதை அமெரிக்க அரசு புரிந்து கொள்ள வேண்டும். கனடாவுடன் எல்லை யைப் பகிர்ந்து கொள்ளும் அமெரிக்க கிராமங்களைவிட மெக்சிகோவின் எல்லை யில் உள்ள அமெரிக்கக் கிராமங்களினூ டாகவே 32 மடங்கு அதிகமான தூள் போதைப்பொருட்களும், 78 மடங்கு அதிக மான போதைப்பொருட்களும் கடத்தப்படும் போது கைப்பற்றப்பட்டுள்ளன. கனடா உடனான வடக்கு எல்லையில் கவனம் செலுத்துவதன்மூலம் அமெரிக்காவினுள் வரும் ஃபென்ரனல் போதைப்பொருள் கடத்தல் பிரச்சினையை தீர்க்க அமெரிக்க அரசு முயல்வது, எடையைக் குறைக்க உணவுக்கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கும் ஒருவர் தமது உணவிற்குப் பின்னர் சீஸ் கேக்கை (Cheese cake for Dessert) சாப்பிட்டுக் கொண்டு தேநீரிற்கு செயற்கை இனிப்பை (Artificial Sweetener) பயன் படுத்துவது போன்றது” என்றார்.

அத்துடன் அவர் அமெரிக்கா மற்றும் கனடா இரு நாடுகளும் தங்கள் எல்லை களுக்கு வெளியே தயாரிக்கப்படும் ஃபென்ரனல் போன்ற செயற்கை போதைப் பொருட்களால் அதிக அளவு இறப்புகளை சந்திக்கின்றன எனவும் குறிப்பிட்டார்.

அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு (US Customs and Border Protection) தரவுகளை கனடிய RCMP நகர்காவலர் சுட்டிக்காட்டி அமெரிக்க

தொடர்ச்சி 05ஆம் பக்கம்









Vlambaram -July 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-07-14 7:21 PM Page 2



# House for Sale / Lease / Condo / BSMT

## Office Unit for Lease

GTA Square
Finch Ave. / Middlefield
2nd Floor Unit
Busy Mall in Scarborough
Under ground Parking

Matt Nadarajah *
Call : 416 960 6130

## Condo for Sale

2 BR. + DEN
2 Washroom
Spacious Balcony
UG Parking
Walk to Go Station

3 Years Old (Pickering)
Asking $649,900

Vishal Sarda *
Call : 416 629 1973

## Condo For Sale

Downtown Toronto
Condo for Sale

300 Front Street
2BR + 2WR Parking
**$935,000**

Deepak Dani **
Call : 416 930 9733

## House for Sale

Detached House
3BR + 1BR BSMT
Separate Entrance
Morningside | Sewells
Great Location

George Paranthaman **
Call : 416 277 9044

## Condo for Sale

2BR / 1WR
700 SF
Hwy 400 / Hwy 7

Higher Floor

Rajiv Agnihotri *
Call : 416 930 0684

## Condo For Rent

2BR + 2WR + Parking

Kennedy / Hwy 401

Tridel Building

Gulshan Sharma **
Call : 416 407 5911

## Condo for Rent

2 BR Condo
2 Wash Rooms
Kennedy / Eglinton

Walk to
Kennedy Subway

Tisi Para *
Call : 647 296 0596

## Condo for Sale

Toronto / Downtown
Studio
(Reve Condo)

Floor to Ceiling Window
Asking 429K

Preethi Pillai *
Call : 416 276 5297

## House for Sale

Detached 2 Storey
4BR + 1 BR
5 WR
Over 2000 SF

Markham
(14th AVE / 9th Line)

Amal Joseph *
Call : 416 300 8294

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2

* Sales Rep.
** Broker

**Tel: 416-321-6969**

* Independently owned and operated.

Vlambaram -July 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-07-14 7:21 PM Page 3





Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

Vlambaram -July 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-07-14 7:21 PM Page 4



# நீதிக்கான குரலை எழுப்பிய அணையா விளக்கு

## – அரவின் –

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த பல ஆண்டுகளாக தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்ற போதும், அவர்களுக்கு சரியான பதிலோ நீதியோ இன்னமும் கிடைக்கவில்லை.

போர் முடிவுக்கு வந்தபின்னர், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி, அவர்களின் உறவுகள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கினர்.

வருடக்கணக்கில் அவர்கள் வீதிகளில் கொளுத்தும் வெயிலுக்கும், நடுங்கும் பனிக்கும், கொட்டும் மழைக்கும் நடுவே போராட்டங்களை நடத்திக்கொண்டு இருக்கின்றனர்.

அவர்களின் போராட்டங்கள் சர்வதேச கவனிப்பைப் பெற்றிருந்தாலும், அவர்களுக்கு நீதி இன்னமும் கிட்டவில்லை.

இந்த போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது பெருமளவிலானோர் அதில் கலந்து கொண்டனர். காலப்போக்கில் அந்த எண்ணிக்கை குறைய தொடங்கியது. இப்பொழுது அது மிகமிக சுருங்கி விட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்காக போராட்டம் நடத்திக் கொண்டிருந்த தாய் தந்தையர் நூற்றுக்கும் அதிகமானோர் முதுமையாலும், நோயினாலும் உயிரிழந்து விட்டனர். இப்பொழுது அவர்களுக்காகப் போராடுவோர் யாரும் இல்லை.

அதைவிட தொடர் போராட்டங்களால் எந்த பலனும் கிடைக்காமல் சோர்ந்து போய் வீட்டுக்குள் முடங்கிக் கொண்டவர்கள் பலர்.

இப்படியாக காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதியும் கிடைக்காமல் உண்மைகளும் தெரியாமல் அவர்களின் உறவுகள் ஊமையாக உறங்கிப் போய்க் கொண்டிருந்த ஒரு கட்டத்தில்தான், அணையா விளக்குப் போராட்டம் ஒரு புதிய வெளிச்சத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இலங்கையில் இப்போது, முன்னெடுக்கப்படும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் மூன்றாவது அலை எனலாம்.

1980களின் இறுதியில் ஜேவிபி கிளர்ச்சியின்போது, பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களைத் தேடி அலைந்த, சிங்கள தாய்மார் களைத்துப்போய் அன்னையர் முன்னணி என்ற பெயரில் தமது பிள்ளைகளுக்காகப் போராட்டங்களை நடத்தினர்.



ஆனால் அவர்களுக்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை. அவர்களின் போராட்டத்தை வைத்து அரசியல் நடத்திய ஜேவிபி, இன்று ஆட்சியைப் பிடித்திருக்கிறது.

அப்போது காணாமல் ஆக்கப்பட்டோரை நினைவுகூரும் வகையில், சீதுவவில் அமைக்கப்பட்டிருக்கின்ற நினைவுத் தூபியில் சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில்கூட, தற்போதைய ஜனாதிபதியோ பிரதமரோ, அமைச்சர்களோ கலந்துகொள்ளவில்லை.

35 ஆண்டுகளாக நடத்தும் அவர்களின் போராட்டம் கிட்டத்தட்ட ஓய்வுக் கட்டத்தை எட்டி விட்டது. இது முதல் அலை.

1996ஆம் ஆண்டு யாழ்ப்பாண குடாநாட்டை இலங்கை படையினர் கைப்பற்றிய பின்னர், பெரும் எண்ணிக்கையானோர் காணாமல் ஆக்கப்பட்டனர்.

இளைஞர்களும் இளம் பெண்களும் மாத்திரமன்றி, குடும்பங்களாகவும்கூட நூற்றுக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட சுமார் 600 பேரில் பதிவுகளைத் திரட்டி வைத்துக் கொண்டு, காணாமல் போனோரின் பெற்றோர் பாதுகாவலர் அமைப்பு என்ற பெயரில் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் 1990களின் பிற்பகுதி தொடக்கம் 2000ஆம் ஆண்டின் தொடக்கம்வரையில் போராட்டங்களை நடத்தினர்.

ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து தங்களுக்கு நீதியைப் பெற்றுத்தருமாறு கேட்டனர்.

ஆனாலும் அவரது பதவிக் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு, இன்றுவரை நீதியும் கிடைக்கவில்லை, அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையும் தெரியவில்லை.

இப்போது அவர்களின் போராட்டம் கிட்டத்தட்ட ஓய்வுக்கு வந்து விட்டது. இது இரண்டாவது அலை.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் அடுத்த கட்ட போராட்டம் தொடங்கியது. இது மூன்றாவது அலை.

இறுதிக் கட்டப் போருக்கு முன்னரும் பின்னரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி, அவர்களின் உறவுகள் போராட்டங்களில் இறங்கினர்.

இந்தப் போராட்டங்கள் கொஞ்சம் கொஞ்சமாக பலவீனப்பட்டுக்கொண்டு இருந்த சூழலில்தான், அணையா விளக்கு போராட்டம் இடம்பெற்றிருக்கிறது.

அணையா விளக்கு ஓர் உண்மையான மக்கள் போராட்டம். எந்த அரசியல் வழிகாட்டலும் அல்லது ஈடுபாடும் இல்லாமல், சுயாதீனமாக சிலர் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்தனர்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் வடக்கிற்கும் பயணம் மேற்கொள்வார் என்பது உறுதியான நிலையில், செம்மணியில் அவரது கவனத்தை ஈர்க்க அந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இது, ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

செம்மணியில் மிக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்திருக்கிறது.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இரண்டு கட்டங்களாக நடத்தப் பட்ட அகழ்வுகளின்மூலம், 65 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

அவர்கள் நிர்வாணமாக்கப்பட்ட நிலையில் புதைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஏனென்றால் எந்த ஒரு உடைகளோ அல்லது அணிகலன்களோ அல்லது தடயப் பொருட்களோ இல்லாத வகையிலேயே பெரும்பாலான உடல்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த உடல்கள் ஒழுங்கீனமாகப் புதைக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் ஆழம் குறைவாக புதைக்கப்பட்டிருக்கின்றன.

இவையெல்லாம் ஒரு மிகப்பெரிய படுகொலை செம்மணி பகுதியில் இடம்பெற்றிருக்கிறது அல்லது வேறு எங்கோ படுகொலைகள் செய்யப்பட்டவர்கள் செம்மணியில் கொண்டுவந்து புதைக்கப்பட்டிருக்கின்றனர் என்பது தெளிவாகியிருக்கிறது.

இந்தப் புதைக்குழி வெளிப்பட்டிருந்த சூழலில்தான், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் வருகையும் இடம்பெற்றது.

இவ்இரண்டும் ஒரேநேரத்தில் கைகூடியது, சர்வதேச கவனிப்பைப் பெறுவதற்குக் காரணம் ஆகியுள்ளது.

நீதிக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் மத்தியில் இது ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கிறது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நூற்றுக்கணக்கில் திரண்டு போராடிக் கொண்டிருந்த மக்களின் முன்வந்து நின்று, கைகூப்பி வணங்கி, மலர் தூவி அணையா விளக்கிற்கு அஞ்சலி செலுத்தி இருந்தார்.

இது, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பக்கம் உள்ள நியாயத்தையும், அவர்கள்



தேடுகின்ற நீதிக்கான குரலையும், அவருக்குள் தொடர்ந்து எழுப்பிக் கொண்டேயிருக்கும்.

இந்தப் போராட்டத்திற்குப் பிறகு சர்வதேச அளவில் செம்மணி புதைகுழிகள் தொடர்பாக பேசப்படுகிறது.

கனடியப் பிரதமரும் பிரித்தானிய அமைச்சர்களும் சர்வதேச இராஜதந்திரிகளும் செம்மணி புதைகுழிபற்றி, அதற்கான நீதிபற்றி பேசத் தொடங்கி இருப்பது அணையா விளக்கு போராட்டத்திற்கு கிடைத்துள்ள முக்கியமான வெற்றி ஆகும்.

இந்தப் போராட்டத்தின் மூலமாக, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்குத் தீர்வு அவசியம் என்பது உணர்த்தப்பட்டிருக்கிறது.

இது இன்னமும் வீரியமான போராட்டங்களை நடத்துகின்ற உந்துதலை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு தோற்றுவித்திருக்கிறது.

அவர்களின் போராட்டம் கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழந்து போய்க் கொண்டிருந்த நேரத்தில் இந்தப் போராட்டத்தின் ஊடாக, புதிய நம்பிக்கை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய நம்பிக்கையாவது அவர்களுக்கு நீதியையும் நியாயத்தையும் உண்மையையும் பெற்றுக் கொடுக்குமா?

விளம்பரம்
VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# வர்த்தக ....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

வடக்கு எல்லையில் மிகக் குறைவான ஃபென்ரனல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதால் கனடிய ஃபென்ரனல் போதைப்பொருள் அமெரிக்காவில் பரவி வருவதாகக் கூறுவதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க அதிபரின் நிர்வாகம் இந்த அறிக்கை மற்றும் ஆதாரங்களை நிராகரித்து கனடா அமெரிக்காவிற்குள் ஃபென்ரனல் போதைப்பொருள் கடத்தப்படுவதில் பங்கு வகிக்கிறது என வாதிடுகிறது. அது அமெரிக்கவின் வடக்கு எல்லையில் 2024ஆம் ஆண்டில் 21.9kg ஃபென்ரனலும் 2025ஆம் ஆண்டில் இது



Canadian Industry Minister Mélanie Joly Thanks: Wikipedia

வரை 8.5kg ஃபென்ரனலும் அமெரிக்க அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியே இதைக் கூறுகிறது.

அமெரிக்க அதிபரின் கனடியப் பிரதமரிற்கான கடிதத்திற்கு சமூக ஊடகங்களில் தனது பதிவை வெளியிட்டுள்ள கனடியப் பிரதமர் மார்க் காணி, "அமெரிக்காவுடனான தற்போதைய வர்த்தக பேச்சுவார்த்தைகள் நடைபெறும் போது கனடிய அரசாங்கம் எங்கள் தொழிலாளர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றை உறுதியாக பாதுகாத்து வருகிறது. தற்போது அமெரிக்க அதிபரால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஓகஸ்ற் முதலாம் திகதி காலக்கெடுவை நோக்கி நாங்கள் எமது பேச்சுவார்த்தைகளைக் தொடருவோம். வட அமெரிக்கவில் ஃபென்ரனல் போதைப்பொருள் கடத்தப்படுவதைத் தடுக்கும் முயற்சியில் கனடா முக்கிய முன்னேற்றம் அடைந்துள்ளது. எங்கள் இருநாடுகளிலும் உயிர்களைக் காப்பாற்றவும், சமூகங்களைப் பாதுகாக்கவும் அமெரிக்காவுடன் சேர்ந்து தொடர்ந்து பணியாற்ற நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்" என்று அதில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபரின் கனடியப் பிரதமரிற்கான கடிதத்திற்கு கனடிய பழமைவாதக் கட்சியின் தலைவர் Pierre Poilievre தனது கருத்தை சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார். அதில் அவர், "கனடா நீண்டகாலமாக அமெரிக்காவின் நம்பகமான நண்பராகவும், வர்த்தகத்தில் பங்காளியாகவும் இருந்து வருகிறது. இந்த சுங்கவரி விதிப்பு கனடியப்



Conservative leader Pierre Poilievre Thanks: Canadian Press/REX/Shutterstock

பொருளாதாரத்தின் மீதான நியாயமற்ற தாக்குதல். ஜூலை 21ஆம் திகதி கனடியப் பிரதமர் நிர்ணயித்துள்ள காலக்கெடுவிற்குள் கனடாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே ஒரு சிறந்த ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கு பழமைவாதக் கட்சியினர் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யத் தயாராக உள்ளனர். இவ்விடயத்தில் எங்கள் நாடு ஒற்றுமையாக உள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ஃபென்ரனல் போதைப்பொருள் கடத்தலுக்கு அடுத்த படியாக கனடாவை குற்றம் சாட்டுவது கனடா, அமெரிக்காவிடம் இருந்து இறக்குமதி செய்வதைவிட அதிக அளவுப் பொருட்களை கனடா அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்கிறது என்பது ஆகும். இந்த வித்தியாசத்தை கனடா அமெரிக்கா விற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு சுங்கவரி விதிப்பதன்மூலம் சமநிலைப்படுத்த அமெரிக்க அதிபர் முயல்கிறார்.

மெக்சிகோவிற்கு அடுத்தப்படியாக அமெரிக்காவுடன் அதிகளவு வர்த்தகம் செய்யும் நாடாக கனடா இருக்கிறது. அமெரிக்க குடிமக்கள் கணக்கெடுப்பு பணியகத்தின் (US Census Bureau) தரவுகளின்படி 2024ஆம் ஆண்டில் கனடா அமெரிக்காவிடம் இருந்து $349.4 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்துள்ளது. இதே காலப்பகுதியில் கனடா அமெரிக்காவிற்கு $412.7 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.

இதனால் கனடா அமெரிக்காவிற்கு $63.3 பில்லியன் அமெரிக்கா டொலர் பெறுமதியான மேலதிகப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.



U.S. President Donald Trump and Canadian Prime Minister Mark Carney
Thanks: Chip Somodevilla /Getty Images

கனடா அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களில் அதிகளவில் போக்குவரத்து உபகரணங்கள், தொழில் துறையில் பாவிக்கப்படும் இரசாயனப் பொருட்கள் மற்றும் உற்பத்தி தொழில் நுட்பம் ஆகியன இருக்கின்றன. இதே



President Donald Trump Thanks: AP Photo/Evan Vucci

வேளை கனடா அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களில் கச்சா எண்ணெய், கனிம எரிபொருட்கள் (Mineral Fuels), வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள், தொழில்துறை இயந்திரங்கள் மற்றும் அணுஉலைகள் ஆகியன இருக்கின்றன. அத்துடன் அதிகளவு உருக்கு மற்றும் அலுமினியப் பொருட்களையும் கனடா அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்கிறது.

கனடியப் பிரதமரிற்கு கடிதம் அனுப்பும் முன்னர் அமெரிக்க அதிபர் சுங்கவரி விதிப்பு சம்பந்தமான கடிதங்களை 23 நாடுகளின் தலைவர்களுக்கு அனுப்பி



Thanks: The Canadian Press

இருந்தார். இதில் சில நாடுகளுக்கு சுங்கவரி அதிகரிப்பும் சில நாடுகளுக்கு சுங்கவரி குறைப்பும் இருந்தன. பெரும்பாலும் இவை அமெரிக்கா மற்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு சுங்கவரி விதிப்பதன் மூலம் இந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு இடையேயான வர்த்தக இடைவெளியை குறைப்பதே நோக்கமாகும்.



U.S. President Donald Trump on the South Lawn of the White House
Thanks: Jonathan Ernst/Reuters

இதற்கு சில நாடுகள் விதிவிலக்காகும். பிரேசில் அமெரிக்காவிடமிருந்து அதிகமான பொருட்களை இறக்குமதி செய்தாலும் அதற்கு 50% சுங்கவரி விதிக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் அரசியல் காரணங்களுக்காக விதிக்கப்பட்ட சுங்கவரியாகும்.

ஸ்ரீலங்கா, ஈராக், லிபியா மற்றும் Moldova ஆகிய நாடுகளுக்கு முன்னர் விதிக்கப்பட்டிருந்த சுங்கவரியைக் குறைத்து தற்போது 30%ஆன சுங்கவரி இந்நாடுகளில் இருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் மற்றும் புருனே நாடுகளுக்கு முன்னர் விதிக்கப்பட்டிருந்த சுங்கவரியைவிட அதிகமும், அல்ஜீரியாவிற்கு விதிக்கப்பட்ட சுங்கவரியில் எந்த விதமாற்றமும் செய்யாமல் புதிய சுங்கவரி விதிக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. இத்துடன் ஜப்பான், தென் கொரியா உட்பட ஏனைய 13 நாடுகளுக்கும் சுங்கவரி விதிப்பு 25%இல் இருந்து 40% வரை இருந்தன. அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்யும் எல்லா நாடுகளின் இறக்குமதிப் பொருட்களுக்கும் குறைந்தது 10% சுங்கவரியை அமெரிக்கா விதித்துள்ளது.


## கனடா வாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றம்

**28ஆவது ஒன்று கூடல் விளையாட்டு போட்டிகள் – 2025**

கனடா வாழ் துன்னாலை-கரவை மக்கள் அனைவரையும் அன்போடு வரவேகின்றோம்.

காலம்: சனிக்கிழமை, ஜூலை 26, 2025
நேரம்: காலை 8:00 முதல் மாலை 8:00 வரை
இடம் : Neilson Park
1555 Neilson Road, Scarborough, ON M1B 5Z7
தொடர்புகட்கு: குகன் (செயலாளர்): (416)834-1081
பார்த்திபன் (உப தலைவர்): (416)522-5544
கனடா வாழ் துன்னாலை-கரவை மக்கள் மன்றம்



## MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university

Special classes
- .Advanced function
- .Calculus & vectors
- .Data management

All Classes available in Scarborough & Stouffville

Contact: 647.340 .9490 / 416.732.2228



Mr.S.F.Xavier
(Teacher)

# ஈஸ்டர் ஞாயிறு வாக்குறுதி காப்பாற்றப்படுமா?

**– முகிலன் –**

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நடக்கப் போவதை பிள்ளையான் முன்னரே அறிந்திருந்தார். அப்போது அவர் சிறையில் இருந்தபோதும், அவருக்கு அந்தத் தாக்குதல் பற்றிய தகவல் தெரிந்திருந்தது.

அவரிடம் நடத்தப்பட்டு வருகின்ற விசாரணைகளில் அதற்கான வலுவான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன என, இலங்கையின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த ஒன்பதாம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது கூறியிருந்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட பிள்ளையான் இப்பொழுது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

அவரிடம் நடத்தப்படுகின்ற விசாரணைகளின் தொடர்ச்சியாக, இந்த மாதத் தொடக்கத்தில், திருக்கோவில், கல்முனை மற்றும் மட்டக்களப்பில் வைத்து இனியபாரதியும், அவரது சாரதியும் மற்றொருவரும் கைது செய்யப்பட்டு இருக்கின்றனர்.

அடுத்தடுத்து கைது செய்யப்பட்ட இந்த மூன்று பேரும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கு பின்னரே, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்ற தகவலை வெளியிட்டிருக்கிறார், பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் நடத்தப்படும் போது, பிள்ளையான் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் அவர் அப்போது தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன், அவர் அரசாங்க செல்வாக்கைப் பயன்படுத்தி பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டு இருந்த அவர், நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார்.

அரசியல் செல்வாக்கின் மூலமே அவரது விடுதலை அரங்கேறியது.

இப்போது பிள்ளையான் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கை மீள விசாரிக்குமாறு கோரவுள்ளதாக அவரது மகன் அண்மையில் கூறியிருக்கிறார்.

பிள்ளையான், இனியபாரதி ஆகிய இரண்டு பேரும் 2004ஆம் ஆண்டுக்குப் பின்னர், கிழக்கு மாகாணத்தில் சர்ச்சைக்குரியவர்களாக இருந்தனர்.



விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து கருணா பிரிந்து சென்றபோது, இவர்கள் கருணாவுடன் இணைந்து செயற்பட்டனர்.

கருணாகுழு என்ற பெயரில், துணை ஆயுதக் குழுவாக இராணுவத்துடன் சேர்ந்து இயங்கிய இவர்கள், தேடுதல்கள், ஆட்கடத்தல்கள், கைதுகள், கப்பம் கோருதல், சித்திரவதைகள் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

பின்னர் இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டபோது, கருணா உருவாக்கிய தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, பிள்ளையானின் கட்டுப்பாட்டில் வந்தது.

பிள்ளையான் அதன் தலைவராக இருந்த அதேவேளை, அவருக்குத் துணையாக அம்பாறையில் தனி ஆட்சி நடத்தினார் இனியபாரதி.

இவர்கள் இரண்டு பேருடைய பெயர்களை கேட்டு மக்கள் அஞ்சுகின்ற அளவுக்கு அங்கு கொடூரங்கள் நடந்தேறியிருந்தன.

அரசியல் பிரமுகர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். சிவில் சமூகப் பிரதிநிதிகள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர்.

இளைஞர்களும் யுவதிகளும் இவர்களால் பிடிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

இவை எல்லாவற்றுக்கும் அப்போது ஆட்சியில் இருந்த மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் ஆசீர்வாதமும் துணையும் முழுமையாக இருந்தது.

அப்பொழுது மகிந்த ராஜபக்சவுக்கு பிள்ளையான் அவசியம் தேவைப்படும் ஒருவராக இருந்தார்.

ஏனென்றால் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக அழித்துக் கொண்டிருந்த அந்தத் தருணத்தில், அரசியல் ரீதியாக - அவர்களைக் கருத்தியல் ரீதியாக தோற்கடிப்பதற்கு, பிள்ளையான் தேவைப்பட்டார்.

அதற்காக பிள்ளையான் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் களம் இறக்கப்பட்டு, மாகாண முதலமைச்சராகவும் முடிசூட்டப்பட்டார். அந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளராக இனியபாரதி செயற்பட்டு இருந்தார்.

இனியபாரதி மீது ஏராளமான படுகொலை, ஆட்கடத்தல், சித்திரவதைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள், வழக்குகள் இருந்த போதும் அவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக அவருக்கு ஜனாதிபதியின் இணைப்பாளர் என்ற பதவி கொடுக்கப்பட்டு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தார்.

அதுமாத்திரமன்றி, இலங்கையின் இரண்டாவது அதிஉயர் சிவிலியன் விருதான தேசமான்ய விருதுகூட இனிய பாரதிக்கு வழங்கப்பட்டது. அந்தளவுக்கு ராஜபக்சவினருடன் இவர் நெருங்கி செயற்பட்டிருந்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கப்பம் கோருதல்கள், சித்திரவதைகள் போன்றவற்றில் இனியபாரதிக்கும் அவரை சேர்ந்தவர்களுக்கும் நிறைய பொறுப்புகள் உள்ளன.

அவருக்கு எதிராக, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட போதும், சட்டத்தின் பிடியிலிருந்து பிள்ளையானும் இனியபாரதியும் தப்பிக்க விடப்பட்டனர். இப்பொழுது அவர்கள் வசமாக மாட்டியிருக்கின்றனர்.

கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தப்பட்ட வழக்கில் பிள்ளையான் கைது செய்யப்பட்டதாக கூறப்பட்டாலும், சுவிட்சர்லாந்தில் தற்போது தஞ்சமடைந்திருக்கின்ற பிள்ளையானின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான அசாத் மௌலானா அளித்த சாட்சியங்களின் அடிப்படையில்தான், அந்தக் கைது இடம்பெற்றதாக நம்பப்படுகிறது.

அந்தக் கைதின் முக்கியமான நோக்கம், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான உண்மைகளை கண்டறிவதாகும்.

பிள்ளையான் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதுதான், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றிருந்தது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் பிள்ளையான் இருந்தபோது, அவருடன் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பை சேர்ந்தவர்களை தொடர்புப்படுத்தி கொடுத்தது, இராணுவப் புலனாய்வு பிரிவுதான் என்றும் குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. அதன் அடிப்படையிலேயே இப்பொழுது விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பிள்ளையான் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவரங்களை அறிந்திருந்தாலும் சரி, அறிந்திருக்காமல் போனாலும் சரி கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் போன்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அவர்மீது உள்ள சாட்சியங்களை



பயன்படுத்தி, வழக்கு தாக்கல் செய்யப்படும் வாய்ப்புகள் இருக்கின்றன. அதேபோலவே இனியபாரதி உள்ளிட்டவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படலாம் எனத் தெரிகிறது.

இது 15-20 ஆண்டுகளுக்குப் பின்னர், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிக்கான கதவுகள் திறக்கப்படுகின்றன என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

அதேவேளை, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் பற்றிய உண்மைகளை வெளிக்கொண்டு வருவது மிகமிக கடினமான பணி என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கூறியிருக்கிறார்.

பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குருத்துவ வாழ்வின் 50ஆவது ஆண்டை நிறைவு செய்யும் வகையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனாலும் பாதிக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம் என்று அவர் உறுதிபடக் கூறியிருந்தார்.

எவ்வாறாயினும் இதற்கு நீதியை பெற்றுக் கொடுப்பது அல்லது விசாரணையை நடத்துவது என்பது இலகுவானது அல்ல என்பதை ஜனாதிபதியின் கருத்தில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

ஏனென்றால் அரசாங்கம் எதிர்பார்க்கின்ற படி, எந்தவொரு அரச கட்டமைப்பிலும் அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை.அதனை அமைச்சர் சமந்த வித்தியாரத்ன வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டு இருக்கிறார்.

இவ்வாறான நிலையில், இந்த அரசாங்கமும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் பற்றிய உண்மைகளை வெளிக்கொண்டு வருமா, இல்லை வாக்குறுதிகளைக் காப்பாற்றாமல் நழுவி விடுமா என்ற சந்தேகங்கள் இருக்கவே செய்கிறது.



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

**தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்**
**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Vlambaram -July 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-07-14 7:21 PM Page 7



# மத அரசியல் நீண்ட காலம் நிலைக்காது – எழுத்தாளர் இந்துமதி

**கண்ணன்**

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

கேள்வி - நீங்கள் ஆன்மிகத்தில் அதிக நாட்டம் உள்ளவர். இந்தப் பின்னணியில் கேட்கிறோம், இந்தியாவில் இன்று வளர்ந்துவரும் மதவாத அரசியலை எப்படி பார்க்கிறீங்க?

பதில் - மதவாத அரசியல் இன்று நேற்று என்றில்லை, மன்னர்கள் ஆண்ட காலத்தில் இருந்தே இருக்கிறது. மதவாதம் மட்டுமல்ல தீவிரவாதமும் அப்போதே இருந்திருக்கிறது. மதத்தை தீவிரமாகப் பின்பற்றிய அரசர்கள், பிற மதத்தவர்களை கூண்டோடு கைலாசம் அனுப்பிய கதையெல்லாம் நமக்குத் தெரியும். மதத்தை வைத்து அரசியல் செய்வது ரொம்ப காலம் நிலைக்காது.

கேள்வி - அரசியல் என்றால் என்ன என்று தெரியும்னு சொன்னீங்க. சரியான அரசியல் எப்படி இருக்கணும்னு நினைக்கிறீங்க?

பதில் - தெரு முழுவதும் எல்லோருக்கும் ஒரே மாதிரி வீடு, எல்லோருக்கும் போதுமான உணவு, எல்லோருக்கும் இலவசக் கல்வி, எல்லோருக்கும் இலவச மருத்துவம் இருப்பதுதான் சரியான அரசியல். அதை யார் செய்கிறார்களோ அவர்தான் உண்மையான அரசியல்வாதி.

கேள்வி - மறைந்த பங்காரு அடிகளாரின் தீவிர பக்தை நீங்கள். அவருடனான முதல் சந்திப்பு ஞாபகம் உள்ளதா?

பதில் - பங்காரு அடிகளார் அப்போது மிகப் பிரபலமாகி இருக்கவில்லை. பங்காரு அடிகளாரை பேட்டி எடுக்க நான் சென்றேன். அவருடனான என் முதல் சந்திப்பு அதுதான். அவருடைய முதல் பத்திரிகை பேட்டியும் அதுதான். இதற்காக நானும் புகைப்படக் கலைஞர் சுபா சுந்தரமும் மேல்மருவத்தூர் சென்று இருந்தோம். நானே தனியாக காரை ஓட்டிக்கொண்டு சென்றேன். சுபா சுந்தரம் தனியாக மோட்டார் சைக்கிளில் வந்தார். எனவே, நான் முதலில் சென்று சேர்ந்துவிட்டேன். அங்கே சென்று பார்த்தால் பொட்டல் காடு. சுற்றிலும் ஆடு, மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. யாருமே இல்லை. தப்பான இடத்துக்குத் தனியாக வந்து மாட்டிக்கொண்டோமோ என்று பயந்து விட்டேன்.



சிறிது நேரத்தில் சுபா சுந்தரம் வந்தார். "என்ன சுபா இப்படியிருக்கிறது" என்று கேட்டேன். 'பார்க்கலாம்' என்றார். அப்போது மேல் சட்டை இல்லாமல், தோளில் துண்டைப் போட்டுக்கொண்டு ஒருவர் வந்தார். அவரிடம் "பங்காரு அடிகளாரை பார்க்க வந்துள்ளோம்" என்றேன். "நான்தான்மா; வாங்க" என அழைத்துச் சென்றார்.

ஒரு சின்ன ஓட்டு வீடு. ஒரே ஒரு நாற்காலி; ஒரு கால் ஆடிக் கொண்டிருந்தது. என்னை அதில் உட்காரச் சொன்னார். கீழே கொறடு மாதிரி இருந்ததில் அவர் உட்கார்ந்தார். எங்கள் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொன்னார். அந்தப் பேட்டி 'குங்குமம்' இதழில் வெளிவந்தது.

அந்த இதழிலேயே பங்காரு அடிகளார் பற்றி சைக்கியாட்ரிஸ்ட் விஜயகுமாரிடம் கருத்து வாங்கி அதனையும் வெளியிட்டு இருந்தோம். "இதெல்லாம் ஹம்பக்" என்று அவர் சொல்லியிருந்தார். பங்காரு அடிகளார் பேட்டியும் விஜயகுமார் பேட்டியும் ஒரே இதழில் அடுத்தடுத்து வெளியாகி இருந்தது. இதழ் வெளியான நாளில் இருந்து எனக்கு தொடர்ந்து தொலைபேசி அழைப்புகள். "உன் காலை உடைத்துவிடுவோம், கையை உடைத்து விடுவோம்" என மிரட்டுகின்றனர். இதனால் மீண்டும் நான் போனேன். பங்காரு அடிகளார் ஒரு வேப்பிலையை கிள்ளி என் கையில் போட்டார். அது சுருட்டாக மாறி விட்டது. "மகளே சுருட்டு பிடிப்பவன் கடைசி பப் வரைக்கும் கீழே போடமாட்டான். அதுபோல் உன் உயிர் உள்ள வரைக்கும் நீ இங்கே வரவேண்டும்" என்று சொன்னார். அதன்பின்னர் தொடர்ந்து போகத் தொடங்கினேன்.

அப்போது ஜெயலலிதா எனக்கு மிக நெருக்கமான தோழியாக இருந்தார். தமிழ்நாடு முதலமைச்சராக எம்.ஜி.ஆர். இருந்த நேரம். வேப்பிலை சுருட்டாக மாறியதை ஜெயலலிதாவிடம் சொன்னேன். "காலடியில் மறைத்து வைத்து, எடுத்து கொடுத்திருப்பான்; அதைப் போய் நீயும் நம்புகிறாயே. பூசணிக்காய் வரவைத்துத் தருவானா" என்று கிண்டலாக சொன்னார். ஒருமையில்தான் பேசினார்.

ஆச்சரியம்; அடுத்தமுறை போகும்போது பங்காரு அடிகளார் அதைக் கேட்டார். "அன்று உன் தோழி உன்னிடம் என்ன சொன்னார். பூசணிக்காய் வரவைத்து தருவானா என்று கேட்டார் அல்லவா. எதற்காக மகளே அவளுக்கு பூசணிக் காய், தேவலோக தெய்வீக பதவிகள் எல்லாம் அவளுக்காக காத்துக் கொண்டிருக்கிற போது" என்றார்.

ஜெயலலிதாவிடம் சொன்னேன். 'இந்துமதி அவரைப் பார்க்க போலாமா' என்றார் உடனே. எம்.ஜி.ஆருக்கு தகவல் சென்றது. லோக்கல் அதிமுக எம்.எல்.ஏ.க்கு உத்தரவு சென்றது. கோவிலில் சொல்லி எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டனர். அன்று அதிகாலை 5 மணிக்கு போன் செய்த ஜெயலலிதா, அழுதுகொண்டே நான் வரவில்லை என்று சொன்னார். இது எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா இருவருக்குள்ளும் சகஜம். 'என்னாச்சு' என்று கேட்டேன். 'நான் அப்புறம் சொல்றேன். நீ போய்ட்டு வா' என்றார். நான் போனேன்.

பங்காரு அடிகளார் சொன்னதுபோல் பிற்காலத்தில் ஜெயலலிதாவுக்கு தேவலோக தெய்வீக பதவிகள் வந்ததா இல்லையா? இதுபோல் பங்காரு அடிகளார் சொன்ன ஒவ்வொரு விடயமும் அதன்பின்னர் நடந்தது. மரகதம் சந்திர சேகரை அழைத்துக்கொண்டு சென்றேன். "மகளே நீ செடியில் இருந்து உதிர்ந்த மலர். மீண்டும் செடியில் போய் ஒட்டிக்கொண்டு மலரப் போகிறாய்" என்று சொன்னார். அடுத்த நாளே மரகதம் சந்திரசேகர் மத்திய அமைச்சரானார்.

கண்ணதாசன் அமெரிக்காவிற்கு சிகிச்சைக்காக போயிருந்தபோது, அவர்கள் வீட்டில் இருந்து மேல்மருவத்தூர் சென்று கேட்டு வரச் சொன்னார்கள். நான் போய் கேட்டேன். "மகளே அவன் உடைந்து போன மண்பாண்டம். திரும்பி வர மாட்டான்" என்று சொன்னார். நான் கண்ணதாசன் வீட்டில் போய், 'அடிகளார் சரியாக சொல்லலீங்க' என்று சொன்னேன். அடிகளார் சொன்னது போலவே அமெரிக்காவில் இருந்து கண்ணதாசன் திரும்பி வரவில்லை.

கேள்வி - உன் உயிர் உள்ளவரைக்கும் நீ வரவேண்டும் என்று உங்களிடம் அடிகளார் சொல்லியிருந்தார். அதன்படி தொடர்ந்து போய்க்கொண்டு இருக்கிறீர்களா?

பதில் - இல்லை. அக்காலத்தில் பிரபலமாக இருந்த ஒரு நடிகை ஒருவரை பேட்டி எடுப்பதற்காகச் சந்தித்தேன். அப்போது, "நீ ஏன் அடிக்கடி பங்காரு அடிகளாரை பார்க்கப் போகிறாய்? போகாதே. புரிஞ்சிக்கோ. நான் சொன்னா கேள்" என அழுத்தமாக சொன்னார். காரணத்தையும் அவர் சொன்னார். அதை இப்போது இங்கே சொல்ல முடியாது. அன்றோடு மேல்மருவத்தூர் போவதை நிறுத்திக்கொண்டேன்.

கேள்வி - பங்காரு அடிகளார் மேல் நிறைய விமர்சனங்களும் இருக்கிறது. குறிப்பாக ஆன்மீகத்தைப் பயன்படுத்தி நிறைய சம்பாதித்து சொத்து சேர்த்துள்ளார் என்று. இதை எப்படி பார்க்கிறீர்கள்?

நான் முதலில் போனபோது பொட்டல் காடாக இருந்த ஓர் இடம் இப்போது எப்படி மாறியிருக்கிறது என்று பாருங்கள். கல்லூரி, பல்கலைக்கழகம் என எவ்வளவு அந்த இடத்தில் வந்துள்ளது. எத்தனை பேரின் வாழ்வாதாரம் அதனை நம்பி உள்ளது. அதனைப் பாருங்கள். மேலும், கோயிலுக்குள் கருவறைவரை பெண்களை அனுமதித்தது, தீட்டான நாட்களிலும் கோயிலுக்குள் வரலாம் என்று சொன்னது அவரது முக்கியமான பங்களிப்புகள். விமர்சனம் யார் மேல்தான் இல்லை. ஒருவர் எவ்வளவு பிரபலமடைகிறாரோ அதே அளவு விமர்சனங்களும் இருக்கும். காய்ச்ச மரம்தான் கல்லடிப்படும் என்று சொல்வார்களே அதுதான். இது உலக இயல்பு.

கேள்வி - உங்கள் கணவர் மறைந்து ஓராண்டு ஆகப்போகிறது. அவரைப் பற்றி;

பதில் - எங்கள் தலைமுறையில் பெண்கள் எல்லோரும் சாதாரணமாக திருமணத்திற்குப் பின்னரே கணவரை அறிவார்கள். ஆனால், என்னைத் தொட்டிலிட்டுப் பேர் வைத்தபோதே அவர் என் கணவராகி விட்டார். நிச்சயித்து விட்டனர். என் அம்மாவின் உடன் பிறந்த தம்பி அவர். சொந்த தாய் மாமா. எங்களில் தாய் மாமாவை மணக்கிற வழக்கமில்லைதான். ஆனால், இது எல்லா வழக்கங்களையும் மீறின பந்தம். "இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்" என்றுதான் சொல்ல வேண்டும். 75 வருட பந்தம். எனக்கு அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, சினேகிதன் என

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

Get in touch for your perfect home!

PUSHPA KANAGARAJAH

SALES REPRESENTATIVE

DIR: 647.786.3436

pushpakana33@gmail.com



HOMELIFE

HIGHER STANDARDS

HOMELIFE/GTA REALTY INC.,

BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED

5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2

B: 416.321.6969 F: 416.321.6963 5215

## நாமும் நமது இல்லமும் 681

# முதல் தடவை ஆதனம் கொள்வனவு



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

பொதுவாக கொரோனா பெருந்தொற்றுக்கு முன்பாக கனடாவில் முதல் தடவை ஆதனம் வாங்கியவர்களுக்கு ஒரு வரையறை காணப்பட்டது. அதாவது, முதல் பல்கலைக்கழகப் படிப்பு, தொழில் தொடங்குதல் பிற்பாடு ஆதன முதலீடு இவை அனைத்தும் 30 வயதிற்கு முன்பாக செய்துள்ளனர். இப்பொழுது முற்றாக புதிய திசையை நோக்கி கனடியர் சென்று கொண்டிருக்கின்றனர். அதாவது தமது 35 வயதின் பின்னால் முதல் ஆதனத்தில் முதலீடு செய்வதனைக் காணக்கூடியதாக உள்ளது.

அதாவது, முதலாவது ஆதனம் 35 வயதிற்குப் பின்பாக வாங்குகின்றனர். இதற்குக் காரணம் அவர்களின் ஆரம்ப முதலீட்டிற்காக பணத்தை சேமிக்கும் காலம் அதிகரிப்பேயாகும்.

இத்தலைமுறையினரின் நோக்கம் பிரயாணம், மேற்படிப்பு, தொழிலின் முன்னேற்றம் இவற்றை முன் நிறுத்தியுள்ளனர். அத்துடன் இன்றைய இளைஞர் (90's) பிள்ளைகள் தமது பாதையை தமது எண்ணம் போலவே அமைக்கின்றனர். இந்த நிலைமை கனடா மட்டுமல்லாமல் முன்னேறிய நாடுகளிற்கும் பொதுவாகவே காணப்படுகின்றது.

| ஆதன விலை | 2025 ஜுன் | 2022 பெப்ரவரி |
|---|---|---|
| ரொறொன்ரோ பெரும்பாகம் | 1,101,6910 | $1,334,544 |
| கனடா | 700,200 | $816,720 |

**ஆடம்பர வீடுகளின் வியாபாரம் எகிறுகின்றது**

பத்து மில்லியனிற்கு ($10 Million) அதிகமான விலையுள்ள ஆதனம் ஆடம்பர ஆதனம் (Ultra Luxury) என அழைக்கப்படுகின்றது. 2024ஆம்ஆண்டின் முதல் கால்பகுதியுடன் ஒப்பிடும்போது 2025ஆம் ஆண்டில் 5 ஆதனங்கள் இந்த விலையில் விற்கப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டில் ஓர் ஆதனமும் இந்த விலையில் விற்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கனடிய அரசின் தகவல்களின்படி, இன்றைய காலக்கணக்கில் முதல் தடவை ஆதனம் கொள்வனவு செய்வோரின் சராசரி வயது 35இற்கு சற்று குறைவு. அத்துடன் 25இற்கும் 34இற்கும் இடைப்பட்ட வயதுள்ளோர் ஆதனம் கொள்வனவு செய்வது குறைந்து வருவதனைக் காணலாம்.

இப்பொழுது 35இற்கு மேற்பட்டவர்களே



அதிகமான முதல்தடவை ஆதன கொள் வனவாளர்களாகக் காணப்படுகின்றனர்.

- **2022 பெப்ரவரி உச்சவிலையை அடைந்த காலம்.**

1990இற்கு முன்பு பிறந்தவர்கள் ஆதனம் முதலீடாகவும், வேலையிலிருந்து ஓய்வு பெறும்போது அடமானக் கடனற்ற முதன்மை ஆதனத்தைக் கொண்டிருப்பர். மற்றும் வேறு வகையான பல முதலீடுகளையும் (RRSP, TFSA போன்றவற்றையும்) வைத்திருப்பார்கள். இவர்களின் ஓய்வுகாலம் ஓரளவு சிறப்பாக இருக்கும்.

35 வயதிற்குப் பிற்பாடு முதலாவது ஆதனத்தை வாங்குவோர், தமது தமது கனவு இல்லத்தைக் கொள்வனவு செய்வதால் அவர்கள் இளைப்பாறும்போதும் ஆதன அடமானக் கடனுடன்தான் ஓய்வுபெற வேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகம்.

உதாரணமாக 40 வயதுகளின் இறுதியில் அல்லது 50 வயதுகளின் ஆரம்பத்தில் தமது கனவு ஆதனம் வாங்கும்போது அடமானக்கடன் நிலுவையில் இருக்கும். இந்நிலையில் மேலதிக சேமிப்பும் இறுக்கமாகலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம்.

ஆனால், இன்றைய சூழ்நிலை அதாவது 2022 பெப்ரவரிக்குப் பின்னால் ஏற்பட்ட வட்டிவீத அதிகரிப்பு, ஆதன விலை இறக்கம் இன்று முதல் தடவை ஆதனம் வாங்குவோரிற்கு சாதகமாகவே உள்ளது. வட்டிவீதமும் இறங்கியுள்ளது. ஆதன விலையும் இறங்கியுள்ளது. ஆதன முதலீட்டாளர்கள் (Investors) ஓரளவு முற்றாக சந்தையிலிருந்து வெளியேறி விட்டனர். ஏற்கனவே பல ஆதனங்களில் முதலிட்ட முதலீட்டாளர்கள் நட்டத்தில் ஆதனத்தை விற்பதனைக் காணலாம். இவர்கள் திரும்பி ஆதனச் சந்தைக்கு வருவார்களா என்பது கேள்வியே. ஆனாலும், கனடிய மக்கள் வாழுவதற்கு ஆதனம் என்றும் தேவைப்படும். ஆதன இறுக்க நிலைமை சிலகாலம் தொடரலாம் என்பதே ஆய்வாளர்களின் கணிப்பு.

இவர்களின் கணிப்பில் மேலும் 0.5% வட்டி இறக்கம் இந்த வருடத்தில் ஏற்படலாம் என எதிர்பார்ப்பதால் முதல் தடவை வாங்குவோர் ஆதனம் வாங்குவதனைப் பற்றி சிந்திக்ககூடிய காலம் இது.

# Tourist Family – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

பிரபல இந்திய தமிழ் திரைப்படங்களில் இலங்கைத்தமிழ் கதாபாத்திரங்களை காணுவது மிகவும் அரிதாக இருக்கிறது. அவ்வாறு வந்தாலும் அவை மிகவும் சிறிய கதாபாத்திரமாகவோ, கோமாளித்தனமாகவோ அல்லது அகதிகளாகவோ மட்டுமே காணப்படுகின்றனர்.

இந்த வரிசையை மாற்றும் விதமாக இப்படம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. படத்தின் தொடக்கத்தில் கணவன் (சசிகுமார்), மனைவி (சிம்ரன்) மற்றும் இரு மகன்கள் என்று ஒரு குடும்பம் இலங்கையிலிருந்து பொருளாதார நிலை காரணமாக இந்தியாவிற்குக் கப்பலில் செல்கின்றனர்.

அங்கு சரியான அடையாளம் இல்லாமல் சென்னையின் சிறிய பகுதி ஒன்றில் உள்ள வாடகை வீட்டிற்கு வந்து சேருகின்றனர். அதே நேரம், அவர்கள் இந்தியாவில் வந்து இறங்கிய நேரத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்திற்கு அவர்கள்தான் காரணம் என காவல்துறை நம்பி, அவர்களை காவலதிகாரி ஒருவர் சந்தேகிக்கின்றார்.

ஒரு பக்கத்தில் இக்குடும்பம் கேரளாவில் இருந்து வந்தவர்கள்போல தமது புதிய



அயலவர்களுடன் பழக, மறுபக்கத்தில் அவர்களுக்குத் தெரியாமல் அவர்களைக் காவல் அதிகாரிகள் தேடுகின்றனர். இந்நிலையில் அவர்கள் தாம் கேரளாவில் இருந்து வந்தவர்களென ஏமாற்றி தப்புவார்களா? இல்லாவிட்டால் கைது செய்யப்படுவார்களா? என்று இப்படத்தை பார்த்து அறியுங்கள்.

வழமையான இந்தியத் தமிழ் படங்கள்போல இதில் இலங்கைத் தமிழ் கதாபாத்திரங்கள் கப்பலில் மறைமுகமாக இந்தியாவிற்குச்



சென்றாலும், இது போர் சூழலில் நடைபெறாதபடியினால் சற்று வித்தியாசமாக உள்ளது. அத்தோடு போர் சார்ந்த ஒரு விடயமும் இப்படத்தில் இல்லை. போர் சார்ந்த படங்கள் முக்கியமானவை என்றாலும், அவை இலங்கைத் தமிழரின் அடையாளம் அகதியாக இருப்பது மட்டுமே என்ற நிலையில்தான் இதுவரை தமிழ் சினிமா இருக்கிறது.

அதற்காக இக்குடும்பம் பெயருக்காக மட்டும்



இலங்கைத் தமிழராக இப்படத்தில் அமைக்கப்படவில்லை. படத்தின் கதை அவர்களது தமிழ் பேச்சு வழக்கில் தங்கியுள்ளது. அதாவது காவல்துறையினால் சந்தேகப்படக் கூடிய பேச்சு வழக்கு இக்கதாபாத்திரங்களுக்கு இருக்கிறபடியினால் தான் கதை நகருகிறது.

அதைவிட இப்படம் நாம் சமுதாயத்தில், குறிப்பாக எமது அயலவர்களுடன் எவ்வாறு பழக வேண்டும் என்று காட்டுகிறது. பிறருக்கு ஒருவர் உதவி செய்தால் பின்பு அவருக்கு உதவி தேவைப்படும்போது ஒருத்தராவது அவருக்கு உதவி செய்வார் என்ற முக்கிய கருத்தை இப்படம் உணர்த்துகிறது.

காவல்துறை இக்குடும்பத்தைத் தேடத் தொடங்கியவுடன் படம் விறுவிறுப்பாகச் செல்கிறது. பல சந்தர்ப்பங்களை சமாளிக்கும் இளைய மகனாக கமலேஷின் நடிப்பு சிறப்பாக இருந்தது.

நல்ல கருத்துகளை உணர்த்தும் இப்படத்தை அனைவரும் பார்க்கலாம்.



நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன. ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கின்றது. – பில்கேட்ஸ்

Vlambaram -July 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-07-14 7:21 PM Page 9



# நல்வாழ்வு பயிற்சி என்றால் என்ன? – பகுதி 7

உஷா மதிவாணன்
M. A (Social Work)
அலைபேசி: 647.808.2904

## Life Coaching

இன்றைய வேகமான உலகத்தில் மன அழுத்தம், குழப்பம் மற்றும் திசை தவறிச் செல்லுதல் ஆகியவை மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகவே ஆகிவிட்டன. மனிதர் தங்களுக்குள்ளேயே பதில்கள் இருக்கின்றன என்பதை உணராமல் வெளியே தேடிக்கொண்டே இருக்கின்றனர். இத்தகைய சூழ்நிலையில் நம்மை நாமே கண்டுகொள்ள உதவும் நல்வாழ்வு பயிற்சி என்பது ஒரு பிரகாசமான வழிகாட்டி ஆகவே திகழ்கிறது.

நல்வாழ்வு பயிற்சி என்பது வாழ்வில் ஒரு மனிதனின் முதன்மையான லட்சியங்கள் மற்றும் விருப்பங்களை முழுமையாக அடைய வழிகாட்டும் ஒரு முழுமையான பயிற்சி முறை என்று இத்தொடரை தொடர்ந்து படித்துவரும் வாசகர்கள் புரிந்து கொண்டிருப்பர். வாழ்வின் சவால்களை நன்கு புரிந்துகொண்டு அவற்றை நேர்கொண்டு வெற்றியடையவோ அல்லது விலகிச் செல்லவோ நம்மைப் பக்குவப் படுத்தும் ஒரு வழிமுறையே நல்வாழ்வு பயிற்சியாகும். இப்பயிற்சி முறை எந்தவித மன நோய்களுக்கோ, அழுத்தங்களுக்கோ ஒரு சிகிச்சை முறை அல்ல என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். மாறாக இது நம் உள் உணர்வைத் தூண்டும், நம் திறமைகளை விழிப்புணர்வுடன் அணுகச் செய்யும் ஒரு பயிற்சி முறையாகும்.

நான் ஒரு சிறு கதைமூலம் இப்பயிற்சி முறையை மேலும் விளக்க விரும்புகிறேன். ஒருநாள் ஒரு மாணவன் தன் குருவிடம் வந்து “ஐயா நான் ஆரம்பிக்கும் எதையும் முடிக்க முடியாமல் திணறுகிறேன். பாதியிலேயே என் முயற்சிகளைக் கைவிட்டு விடுகிறேன். என்னைப்போலவே பலரும் இருக்கின்றனர் என்பதையும் நான் பார்க்கிறேன். எதனால் இந்த நிலை இருக்கிறது?” என்று கேட்டான்.

அதற்கு குரு சிரித்தபடியே ஒரு கண்ணாடி போத்திலை இவன் கையில் கொடுத்து “ஒரு சிறிய கல்லை இதனுள் போடு. பிறகு ஒரு நீளமான குச்சி கொண்டு அதை வெளியே எடு” என்றார். மாணவன் பலமுறை முயன்றும் அவனால் அதை எடுக்க முடியவில்லை. குரு அவனிடம் இருந்து அந்தப்போத்திலை வாங்கி ஒரு சிறு புன்னகையுடன் தலைகீழாகத் திருப்பி கல்லைக் கீழே விழ விட்டார்.

பிறகு அவர் கூறினார் “ஒரு பிரச்சனையின் தீர்வு எப்பொழுதும் நாம் நினைக்கும் படியே இருக்காது. சில சமயம் அதற்கு எதிர்மறையாகவே நமக்கு தீர்ப்புகள் எழுதப்படுகின்றன. அப்பொழுது நமது எண்ணத்தின் திசையையே நாம் மாற்ற வேண்டும்.” என்றார். இந்தப் பாடத்தை சரியாகப் புரிந்துகொள்வதுதான் நல்வாழ்வு பயிற்சியின் முதல் உண்மையாகும்.

பகவத் கீதையில் ஒரு வசனம் உள்ளது.

“உற்சாகம், தைரியம் மற்றும் தன்னம்பிக்கை இல்லாதவனுக்கு எந்த யுத்தமும் தோல்வியையே அளிக்கும்.”

இந்த வசனமே நல்வாழ்வு பயிற்சியின் இரண்டாவது உண்மையாக இருக்கிறது.

நல்வாழ்வு பயிற்சியாளர் அவரது வாடிக்கையாளரினுள் புதைந்து கிடக்கும் மாபெரும் நம்பிக்கையை வெளியே கொண்டுவந்து அதை அவர் அங்கீகரித்து உபயோகப்படுத்த உதவுபவராக இருக்கிறார். அச்சம், பயம், திணறல், குழப்பம், சோர்வு, திகைப்பு, பதட்டம், சங்கடம் ஆகியவை மனிதனின் இயல்பான குணங்களாக இருப்பது இயற்கைதான்.

இப்பிரபஞ்சத்தின் பல்வேறு முகங்களான மலைகள், சமுத்திரங்கள் இயற்கையின் சீற்றங்கள் போன்றவற்றை எதிர்கொள்ளும் போது மனிதன் தன்னை ஒரு சிறு மணல் துகளைவிட சிறியதாகவே உணர்வான்.அதுவே உண்மையும்கூட! அப்போது மேற்கூறிய மனிதனின் இயல்பான குணங்கள் மேலெழுந்து வந்து அவனை மேலும் அச்சுறுத்துகின்றன. அவற்றை முறைப்படி நிர்வாகிக்க கற்றுக் கொடுத்தால் தான் (கற்றுக் கொண்டால்தான்) வாழ்க்கையில் அமைதியும், நிம்மதியும் கிடைக்கும்.

நல்வாழ்வு பயிற்சி முறை இவ்வாழ்க்கையை நிர்வாகிக்கும் தந்திரத்தையே வாடிக்கையாளருக்குக் கற்றுத் தருகிறது.

நமது கடந்த காலம் நமது எதிர்காலத்தோடு எந்த விதத்திலும் சம்பந்தப்பட்டது இல்லை. நம்மில் பலரும் நமது கடந்த காலத்திலேயே வாழ்வதால்தான் நமது எதிர்காலமும் அப்படியே இருக்கும் என்று நம்பி விடுகிறோம். நல்வாழ்வு பயிற்சி இந்த நம்பிக்கையை முதலில் தகர்த்து எறியும். வாழ்க்கை இன்னும் முழுமை அடைய வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் முதலில் ஒரு நல்வாழ்வு பயிற்சியாளரைத் தேடுங்கள். ஏனெனில் ஒரு நேர்த்தியான உரையாடல், ஒரு திறந்த மனம், ஒரு நேர்மையான கேள்வி, எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாத ஓர் அக்கறை நமது வாழ்க்கையை மாற்றக்கூடியவை ஆகும்.

ஒரு நல்வாழ்வு பயிற்சியாளர், வாடிக்கையாளருக்கு இவற்றைதான் முன்வைக்கிறார். இன்றைய மிக வேகமாக மாறும் உலகில் இவை அனைத்தும் அருகி வருகின்றன என்பதை நாம் நன்கு அறிவோம்.

நாம் எவ்வாறு வாழ வேண்டும் அல்லது எவ்வாறு வாழ விரும்புகிறோம் என்பதற்கான தெளிவின்மையே நமது முதல் பிரச்சனையாகும். ஒரு நல்வாழ்வு பயிற்சியாளர் முதலில் அந்தத் தெளிவை உருவாக்குகிறார். பிறகு நமது லட்சியங்களை நோக்கி நம்மை செலுத்துவதற்கு அவர் வழிமுறைகளை சுட்டிக்காட்டுகிறார். உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த வழிமுறைகள் எதுவுமே நீங்கள் கேள்விப்படாததோ அல்லது முன்பே அறியாமல் இருப்பதோ அல்ல. உங்களுக்குத் தெரியும். ஆனால் அந்த வழிமுறைகளை முறையாகப் பின்பற்று வதை நமது மனதில் இருக்கும் பல தடைகள் தடுக்கின்றன. இத்தடைகளை உங்களுக்கு சுட்டிக்காட்டி அவற்றை தாண்டி வருவதற்கான எளிய பயிற்சி முறைகளை உங்களுக்கு எடுத்துக் காட்டுவதே நல்வாழ்வு பயிற்சியாளரின் நோக்கமாகும்.

கடைசியாக ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன், தாகம் எடுக்கும் குதிரையை குளத்தின் அருகில் கொண்டு செல்ல மட்டுமே குதிரைக் காரனுக்கு முடியும். தண்ணீரைக் குடித்து தாகத்தை தணித்து கொள்வது குதிரை செய்ய வேண்டிய வேலை ஆகும். உதாரணம் புரியும் என்று நம்புகிறேன்!

மீண்டும் சந்திப்போம்!

---

# மத அரசியல்...

7ஆம் பக்கத்தொடர்ச்சி

எல்லாமாக இருந்தவர். ஒரு வார்த்தை அதிர்ந்து பேசியவரில்லை. ஒரே ஒரு முறைகூட கோபத்தில் திட்டியதில்லை. சொல்லாலோ செயலாலோ புண்படுத்தியதில்லை. அநியாயத்துக்கு நல்லவர். படம் எடுத்தபோது வெளியூர் படப்பிடிப்புக்குக் கிளம்பினால், “அவ தனியா இருக்க மாட்டா. கரண்ட் போனா வீல் என்று கத்துவா. இருட்டுக்கு பயப்படுவா. நீங்களோ செல்வாவோ அவகூட இருங்க. ராத்திரியில் தனியா விட்டுடாதீங்க;” என்பார். தரும புத்திரர் மாதிரி. எல்லாரை யும் எல்லாவற்றையும் நல்லதாகவே பார்த்தவர். திரைப்படம் எடுக்கப் போய் அத்தனை பணத்தையும் இழந்தபோது, “பணம்தானே போச்சு. பரவாயில்லை. பணம் முக்கியமில்லை. எங்களுக்கு நீதான் முக்கியம்” என்று விழுந்துவிட்ட ஆழத்தில் இருந்து கைதூக்கி விட்டவர்.

அவர் மெக்கானிக்கல் இன்ஜினியர். சொந்தத் தொழிற்சாலை நடத்தியவர். தொழிற்சாலைக்குப் போகும் போதெல்லாம் பிரமித்திருக்கிறேன். ஒவ்வொரு இயந்திரத்துடனும் அவர் பேசுவார். அந்த மொழி எனக்குத் தெரியாது. என்னால் புரிந்துகொள்ள முடியாது. எப்படி அவர் உற்பத்தி செய்வது எனக்குத் தெரியாதோ, அதேபோல் நான் எழுதுவதும் அவருக்குத் தெரியாது.

எங்கு போனாலும் எனக்குப் பிடித்த பொருட்களை அவர் வாங்கி வருவார். எங்களுடைய திருமணத்திற்கு முன்பாக, அவர் லண்டனுக்கு செல்லும்போது, அவருக்கு ஒரு சட்டை வாங்கிக் கொடுத்தேன். அவர் லண்டனுக்கு சென்று, அங்கிருந்து இங்கே வந்து, பிறகு எங்களுக்கு திருமணமாகி, குழந்தை பிறக்கும் வரைக்கும் அதை கண்ணாகவும் பொன்னாகவும் பாதுகாத்து வைத்திருந்தார். ரொம்பவே சாதாரண சட்டை தான் அது. எதுவாக இருந்தாலும், அது “இந்து கொடுத்தது, இந்து கொடுத்தது” என்று சொல்வார். இந்து தான் அவரின் உலகம்.

**கேள்வி - உங்கள் வாழ்வில் மறக்க முடியாத அனுபவம் ஒன்றை சொல்லுங்கள் என்றால் எதை சொல்வீர்கள்?**

**பதில் -** ஒரு முறை விமான நிலையத்தில் அமர்ந்திருந்தபோது, என் முன்வரிசையில் அமர்வதற்காக மூப்பனார் வந்தார். உட்காரப் போனவர் என்னைப் பார்த்துவிட்டு, திரும்பி என்னை நோக்கி வந்து, “அம்மா வணக்கம். என்னை மூப்பனார்னு சொல்லு வாங்க” என்றார். “அய்யோ சார், உங்களைத் தெரியாதா” என நான் ஆச்சரியத்துடன் பேச, அதன்பிறகு அவர், “நான் உங்கள் ‘தரையில் இறங்கும் விமானத்தின்’ தீவிர வாசகன். அந்தக் கதையை எத்தனை முறை வாசிச்சிருப்பேன்னு எனக்கே தெரியாது” என என் எழுத்தைப் பாராட்ட ஆரம்பித்துவிட்டார்.

எழுத்தாளர்கள் தி. ஜானகிராமன், அசோகமித்திரன் ஆகியோரும் இந்தக் கதை குறித்து தங்கள் கருத்தை கடிதம் மூலமாக எனக்குத் தெரிவித்திருந்தனர்.

**கேள்வி - உங்கள் வாழ்க்கை தத்துவம்;**

**பதில் -** எல்லாரிடமும் அன்பு செலுத்த வேண்டும். நான் சூரியனுக்குக் கீழே உள்ள அனைத்தையும் நேசிக்கிறேன். யாரையும் யாரும் உடலால் மட்டுமல்ல, மனதாலும் காயப்படுத்தக்கூடாது என்பது என் எண்ணம். அன்பை மிஞ்சி இந்த உலகத்தில் எதுவுமில்லை.


யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# முட்டாள்த்தனமாக வாழாதே - நாடும் நடப்பும்



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

அறிவீனம், மடமை, அபத்தம், மூடத்தனம், பேதமை, அறியாமை என்பவை முட்டாள்த்தனத்தின் பொருளாகும். என்ன கற்றிருந்தாலும் இதைச் செய்தால் இது நடக்கும் என்பதை அறியாதவன் அல்லது அதை ஒத்துக்கொள்ளாதவன் முட்டாள். பேதமை அறிவுடமைக்கு எதிர்ச்சொல். "நல்லது, கெட்டது, ஊதியம் பயப்பது என்பவற்றை உய்த்து உணரமாட்டாத மயக்க உணர்வே முட்டாள்த்தனம்" என்கிறார் தண்டபாணிதேசிகர். நட்புக்கும், சமுதாய வாழ்வுக்கும் பொருத்தமில்லாதவன் முட்டாள். பழிக்குப் பயப்படாமல் இருப்பது, மனதில் அன்பில்லாமல் இருப்பது நல்லதைச் செய்யாமல் இருப்பது இவைதான் அறியாமையின் இலக்கணங்கள் என்கிறார் வள்ளுவர். அவன் செய்வன எல்லாம் பெரும்பாலும் குற்றமாகிறது. பொதுவிலிருந்து விலகிய நடத்தை உடையவன், தனிப்போக்குக் கொண்டவன் முட்டாள். முட்டாள்தனமாக வாழ்பவர்களால்த்தான் சமுதாயம் பலவீனம் அடைந்து வருகின்றது.

முக்கியத்துவம் இல்லாத இடத்தில் மீண்டும், மீண்டும் முகம் காட்டுவது, என்றோ தீர்மானம் செய்யப்பட்ட முடிவுகளுக்கு இன்று காரணம் கேட்டு நிற்பது, அளவுக்கு மீறியபொறுமைகூட சில நேரத்தில் முட்டாள்த்தனமாகும். அதனால் முடிந்தவரை பொறுமை கொள். முடியாத பட்சத்தில் துணிந்து நில். அதில் தவறு ஏதும் இல்லை. உலகத்திலே பெரிய முட்டாள்த்தனம் நம்மைப் போலவே மற்றவர்களும் இருப்பர் என நினைப்பது.




சில துரோகம் இழைத்தோரும், தவறு செய்தோரும் என்னவோ பெருமிதத்துடன் தான் வாழ்கின்றனர். பாதிக்கப்பட்ட சிலர் காலம் பதில் சொல்லும், கர்மா பாடம் புகட்டும் என நம்பி வாழ்ந்துவருவோரும் உளர். தேர்ந்தெடுக்கப்பட்டவன் அயோக்கியன் என்றால் தேர்ந்தெடுத்தவன் முட்டாள் என்று அர்த்தம். "ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என உணரும் தருணத்தில் புத்திசாலி ஆகிறான், ஒரு புத்திசாலி தன்னைப் புத்திசாலி எனப் பெருமை கொள்ளும் கணத்தில் முட்டாள் ஆகிறான்" என்கிறார் அப்துல்கலாம். முட்டாள் பட்டம் கிடைப்பதற்கு ஒருவருக்கு அறிவில்லாமல் இருக்கவேண்டும் என்றெல்லாம் அவசியம் இல்லை. அதிக



அன்போடு இருந்தாலே போதும் சிலருக்கு முட்டாள் பட்டம் தானே கிடைத்துவிடும். "முட்டாள்களுடன் ஒருநாளும் விவாதம் செய்யாதீர்கள். ஏனெனில் வெளியே நின்று பார்ப்போருக்கு உங்களில் யார் உண்மையான முட்டாள் என்று தெரியாமல் போய்விடும்" என்கிறார் ஹிட்லர்.

நல்லவனாய் இரு. ஆனால் அதை நிரூபிக்க முயற்சி செய்யாதே. அதைவிட முட்டாள்த்தனமான விடயம் ஏதும் இல்லை. விலகிச்செல்பவனிடம் வலியச் சென்று தன் அன்பை நிரூபிக்க முயற்சி செய்வதும், அறியாமை மற்றும் தவறான வழியில் செல்வதும் மூடத்தனமாகும். நம் வாழ்விலிருந்து விலகுபவர்களை விரட்டிப் பிடிக்க நினைப்பதும் முட்டாள்த்தனமான ஒன்று. பேதமை ஒன்றும் அறியாத முட்டாள்த்தனம். தன் கேட்டிற்குக் காரணம் யாதெனத்தானே அறியமாட்டாதவன் அறிவுறுத்தினாலும் உணரமாட்டான். "பேதைக்கு உரைத்தாலும் தோன்றாது உணர்வு" என்பது பழமொழி. முட்டாளால் தன்னை அடக்கி ஆளமுடியாது. பெரியோர் கூடிய இடத்தில் பேதை தாங்க முடியாத இழிவை உண்டுபண்ணி விடுவான். பிறரோடு பழகுவதில் உள்ள குற்றம் குறைகளுக்குப் பெரிதும் காரணமாகி விடுவான். மற்றவரின் மனதில் உள்ளதை சந்தேகம் இன்றித் தெளிவாக உணரும் தன்மை இல்லாதவர்கள் ஒரு காரியத்தை முடிக்கும் வகையும், அதனால் வரும் இடைஞ்சலையும், இறுதியில் கிடைக்கும் பயனையும் தீர்மானிக்க முடியாதவர்கள் முட்டாள்கள். மனத் தெளிவுடன் உறுதியாகக் காரியத்தை மேற்கொள்ள இயலாதோர். சிறப்பையும், நன்மையையும் தராத காரியங்களில்தான் கூடுதலாக ஈடுபடுவர். பேச்சில் அர்த்தமும் பயனும் அறிந்து பேசமாட்டார்கள். இவர்களுக்கு சொல்வன்மையும் குறைவு.

